முருகப்பெருமான் துணை

**மகான் திருப்பாணாழ்வார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.09.2022**, சனிக்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா வாழ்க
ஞானிகளை படைக்க வந்த
ஞானபண்டிதன் அவதாரமே வாழ்க
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது யாளி திங்கள்
குறையிலா மூவாறு திகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 18 நாள், 03.09.2022 சனிக்கிழமை)
தெரிவிக்க அருளாசி தன்னை
தேசிகனுக்கு திருப்பாணாழ்வார் யானும்
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான தரும வழி காட்டும்
ஞான வழிகளுடனான அரங்கன்
நன்னெறிகளை ஏற்று வர
4. வருகவே மனிதர்களிடை சக்தி
வல்லமை மிக்க ஞான சக்தி
தருமத்தை வளர்க்கும் சக்தியாக
தரணியை காக்கும் சக்தியாகப் பெருகி
5. பெருகியே கலியுகம் தன்னில்
பேரிடர் பிரளயம் தனையே வெல்லும்
ஆறுமுகனார் சர்வ சக்தியாக
ஆற்றல்மிக்க மனிதர்களாக மாறுவர்
6. மாறவே எங்கும் எதிலும்
மகத்துவம் வள்ளல் தன்மையாகி
அறம் பெருக உலகே பாதுகாப்பும்
அமைதி ஆனந்தம் அனைத்தும் அடையும்
7. அடையவே கலிவெல்லப் பிறந்த
அரங்கனின் நாமசெப பலம்
தடையற எங்கும் நிலைத்திட
தரணியோர்க்கு சர்வ பலமும் காண்கும்
8. காண்கவே அரங்கன் நோக்கமான
கலி இடரான மாயைதனை வென்று
மேன்மை தரும் ஞானவான்களாக
முருகப்பெருமான் ஆற்றல் கிட்டி
9. கிட்டியே உலகமக்களெல்லாம்
குறைவிலா சகல வளமும் பெருகி
இட்டம் போல் காரிய வெற்றிகளும்
எல்லா வரமும் கண்டு தேறுவர்

10. தேறவே அரங்கன் சீடர்களென
தெய்வீக அடையாளம் கொண்டு
அறத்துடன் வாழும் வாழ்வுமுறையும்
ஆன்மீக ஞானவான்களாகச் சிறந்து

11. சிறந்துமே ஞானிகள் ஆவர்
சித்திகள் பெருகி உலகினில்
அருந்தவசிகள் தலைமை ஏற்ற
ஆறுமுகனார் ஞான ஆட்சிமலரும்
அருளாசி முற்றே

–சுபம்–